# கவிதை

## காலம்

கண்ணாடிக் கதவுகள் திறந்து
கவளம் வைக்கிறேன்
ஓரக்கண்ணால் பார்ப்பவைகளின்
கண்களில் மின்னுகிறது–கண்ணி பயம்

ஏக்கத்தோடு பறந்து
தூரப் போய்விடுகின்றன..
இருக்கலாம்–நஞ்சு குறித்த சந்தேகங்களும்

கதவுகளை சாத்துகிறேன் இறுக்கமாய்,
அறைக்குள் வந்துவிடக் கூடும்
காகங்கள் என..

பரஸ்பர நம்பிக்கையின்றிப் பழகுகிறோம்
நானும்
காக்கைகளும்.

*- அன்பாதவன்*

## சருகுகள்

உச்சியில்..
ஓர் தளிரிலை
கொப்புக்குள் நம்பிக்கை
தாங்கிக் கொள்கிறது..!

எட்டத்தில் ஓர் சருகிலை
கொப்புக்குள் போராட்டம்
சருகே உதிர்ந்து விடுகிறது..!
சருகுக்குள் என்ன
கோவமா? விரக்தியா...??!
இல்லை இல்லை
சாதித்த திருப்தி...
தளிர் தாங்கும் கொப்போடு
மரத்துக்கு உயிர் தந்து
நாளை உரமாயும்
வீழ்ந்த போதும் உபயோகம்..!

முதுமை ஒன்றும் வீணல்ல
வீணை...
மீட்ட மீட்ட பிறக்கும்
புதிய ராகம்
அங்கு
அது புதிய வீணை
தியாகவீணை
அரவணைப்பது எம் கடன்...!

*- சமூகக் கிறுக்கன்*

## பூவின் உடை

அழகு குலையாத வண்ணங்களால்
நெய்யப்பட்ட உடுப்பாய்த்
தொங்கியது பூ
இரவு பகலென்று காலம் நிறம் மாற
சூரியன் தனது கரம் நீட்டப்
பூவின் உடை
உலர்ந்து உதிர்ந்தது
மிருக வாய் சந்தித்த
பறவையின் உதிரும் இறகுகளைப்போல
பூமியெல்லாம் இரத்தத்துளிகள்.

*-குட்டி ரேவதி*

## சிரிப்பு

அடிமனதின் அழுத்தத்தை அறவே அகற்றிடும்
அமிர்தாஞ்சன்
நெஞ்சு பாரத்தைக் கொஞ்சம் குறைத்திடும்
வலி நிவாரணி
பதற்றத்தையும் படபடப்பையும் போக்கிடும்
புகை போக்கி
சிந்தனைக் குதிரைகளை சீறிப் பாயச் செய்திடும்
ஸ்காட்ச் விஸ்கி
அக்னி வெயிலின் உக்கிரத்தைக் குறைத்திடும்
தர்பூசணி
சூறாவளிக் காற்றில் சுழன்றிடும் வாழையைத் தாங்கும்
சவுக்கு மரம்
அழுபவனையும் ஆனந்தத்தில் மூழ்கடிக்கும்
அன்னை மடி
சிரிப்பு! நீயும் சிரித்துப்பார்
சிறகடித்துப் பறந்துபார்!

*- ஜான் பீ. பெனடிக்ட்*

## மனித(மன)ம்

முகஸ்துதிப் பவுடர்
பூசிப் பூசியே
கறுத்துப்போயுள்ளது
மனித(மன)ம்

அகந்தையின்
அடம் பிடிப்புகளோடு
போராடி
தோற்றுப் போனது
எங்கள் சுயம்

மதித்தலும்
நேசித்தலும்
அனுதாபமும்
மமதை விருட்சத்துக்கு
முன் தலை
கவிழ்ந்து கிடக்கிறது

தம் பட்டங்களை
தம்பட்டமடிக்கும்
விளம்பர போதையிலும்
வியாபார மாயையிலும்
சறுக்கிக் கிடக்கிறது
மனித(மன)ம்

*- இலங்கைப் பெண்*

## கனியுமா?

கழியாதோ ஆண்டென்று
கடிந்தேநாம் துரத்தாத
களிப்பான ஆண்டாக
கனிந்திடுமா இவ்வாண்டு?

*- ஜனா*

## மனிதன்

இவன் பசுவின் பாலைக் கறந்தால்
பசு பால் தரும் என்கிறான்.
காகம் இவன் வடையை எடுத்தால்
காகம் வடையை திருடிற்று என்கிறான்

*- கவிஞர் காசி ஆனந்தன்*




ஸ்ரீ துர்க்காதேவி
ஜோதிடம்
தேவேந்திரன் சாஸ்திரி
அவர்கள்

Mob: 07947 781 197
07857 414 342

Mobile inn
320,London Road, West Croydon
Surrey CR0 2TJ
(opposite Best Food super Market)
(Near Mithus Gold House)

திருமணப் பொருத்தம்
சாதகம் குறித்துக்
கொடுக்கப்படும்.



23 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள் துர்க்கா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள், கணவன் மனைவி ஒற்றுமை,கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம்,கண் திருஷ்டி,கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

**Devendran Sastry**

23 Years expert pandit at service, past, presents and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, job, Love, Marriage, Family problem, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad, Money, Removal all type of black magic and evil things by performing prayers, Devi Upasana, Luxmi pooja also protecting from enemies and jealousy Protection for self, House Business, Spoken Languages: Tamil, Hindi & English.

Call: **07947 781 197** or **07857 414 342**

Opening Hours: 9.30am to 8.30pm 7 Days a week